# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1970/15 - 2016 ජූනි මස 08 වැනි බදාදා - 2016.06.08

*1970/15 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு யூன் மாதம் 08 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும்

ச. அ. இல. : சி எஸ்ஏ/7/சி ஓஐ/எம்எஸ்/01.

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்**
**அதியுத்தமராம் சனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களினால்**

(முத்திரை)

மைத்திரிபால சிறிசேன.

1. திரு. பிரீதீ பத்மன் சூரசேன அவர்கள்
   மேன்முறையீட்டு நீதிபதி
2. திரு. குலதுங்க முதியன்சேலாகே கிஹான் ஹிமான்சு குலதுங்க அவர்கள்
   மேல் நீதிமன்ற நீதிபதி
3. திரு. பஸ்துன்கோரளே ஆரச்சிகே பேமதிலக அவர்கள்
   ஓய்வுபெற்ற கணக்காய்வாளர் நாயகம்
4. திரு. விகும் அதுல களுஆரச்சி அவர்கள்
   மேல் நீதிமன்ற நீதிபதி

ஆகியோருக்கு,

வாழ்த்துக்கள் !

விசாரணை ஆணைக்குழுக்கள் சட்டத்தின் (393 ஆம் அத்தியாயம்) 2 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக 2015 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 03 ஆந் திகதிய அதிகாரப்பத்திரத்தின் மூலம் என்னால் விசாரணை ஆணைக்குழுவொன்று தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும் ;

மேலும், சொல்லப்பட்ட விசாரணை ஆணைக்குழுவின் ஆணையாளரொருவரான மேல்நீதிமன்ற நீதிபதி தேகிரி அமேந்திர மெண்டிஸ் செனவிரத்ன அவர்கள் மரணமடைந்துள்ளாராதலாலும்;

மேலும், அதனால் ஏற்பட்ட வெற்றிடத்தை நிரப்பவேண்டிய தேவை இனங்காணப்பட்டுள்ளதாதலாலும்;

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆகிய நான், விசாரணை ஆணைக்குழுக்கள் சட்டத்தின் 3 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, மேல்நீதிமன்ற நீதிபதி பியசேன ரணசிங்க அவர்களின் விவேகம், திறமை, நேர்மை என்பன பற்றி மிகுந்த நம்பிக்கையும் பற்றுறுதியும் கொண்டு மேற்போந்த அதிகாரப் பத்திரத்தின் வண்ணம் தாபிக்கப்பட்ட விசாரணை ஆணைக்குழுவின் ஆணையாளரொருவராக இத்தால் நியமிக்கின்றேன்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் இலாஞ்சனையின் கீழ் இரண்டாயிரத்துப் பதினாறாம் ஆண்டு யூன் மாதம் 01 ஆம் நாளாகிய இன்று கொழும்பில் அளிக்கப்பட்டது.

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

பி. பீ. அபேகோன்,
சனாதிபதியின் செயலாளர்.

6-757

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.